[21st March 1959

Sri K. PONNIAN: தலைவர் அவர்களே, தோட்ட முதலாளிகள் எப்பொழுதுமே அரிசியை 2, 3 மாதங்களுக்கு ஸ்டாக் வைத்து, வாரா வாரம் தொழிலாளர்களுக்கு கொடுப்பார்கள். இப்பொழுது அவர்களுக்கு அரிசி கிடைப்பது கடினமாக இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அதற்கு ஏதாகிலும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எனக்குக்கூட அம்மாதிரி தோட்ட முதலாளிகளிடமிருந்து, எந்தத் தொகுதியை கனம் அங்கத்தினர் அவர்கள்குறிப்பிட்டுச் சொல்லுகிறார்களோ அந்தத் தொகுதியிலிருந்து தகவல் வந்தது. நான் அதிலே கண்டது வியாபாரிகளே அதை பயன்படுத்திக்கொண்டு, இந்தக் கண்டிப்பை கொஞ்சம் தளர்த்தலாம் என்ற நோக்கத்தோடு செய்கிறார்கள். ஒரு வியாபாரி தான் வைத்துக்கொண்டிருக்கிற அரிசி, நெல் இவைகளை ஒரு இடத்தில் பதுக்கிக்கொண்டிருக்கிறார். தோட்ட முதலாளிகளிடமிருந்து தங்களுக்கு அரிசி கிடைப்பதில்லை என்று சொல்லி, குறிப்பிட்ட வியாபாரிகளுக்கு சலுகை காட்டவேண்டுமென்றுகூட தகவல் வந்தது. அந்த நிலைமை தோட்ட முதலாளிகளுக்கு விளக்கப்பட்டது. அதற்கு மேல் அவர்களும் இப்பொழுது எங்களுக்கு விளக்கம் தெரிந்து விட்டது, இப்பொழுது ஒன்றும் தொல்லை இல்லை என்று தெரிவித்தார்கள்.

Sri S. M. ANNAMALAI: நெல் அதிகமாக விளையக்கூடிய இப்படிப்பட்ட மாவட்டங்களில் விலை ஏற்றம் அதிகமாக இருக்குமானால், மற்ற மாவட்டங்களில் விலை ஏற்றம் இன்னும் அதிகமாக இருக்குமே ? அப்படி அதிகமாக விளையக்கூடிய இடங்களில் நிவாரணக் கடைகள் இருக்குமானால், மற்ற இடங்களிலும் நிவாரணக் கடைகள் திறப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

The Hon Sri M. BHAKTAVATSALAM: நேற்றுதான் நான் வட ஆற்காடு மாவட்டத்திற்குப் போயிருந்தேன். கலெக்டர் அவர்களிடம் பேசினேன். அங்கு சில இடங்களில் மழை குறைவினால் நிலவரி வஜா செய்ய வேண்டியிருந்தாலும், அந்த மாவட்டத்திற்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு உற்பத்தி ஆகியிருக்கிறது, அங்கு விலையும் குறைந்திருக்கிறது என்பதுதான் நான் கவனித்தது.

Sri A. VEDARATHNAM: விதைக்குகூட நெல் விளையாத பஞ்ச பிரதேசங்களிலிருந்து நியாயவிலைக் கடைகள் திறக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு கோரிக்கைகள் வந்திருக்கிறதா ? அத்தகைய இடங்களில், அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இப்பொழுது எங்கும் நியாயவிலைக் கடைகள் திறக்கவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

Sri K. B. S. MANI: என். ஜி. ஓக்களுக்கு கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் இருப்பதினால் அவர்கள் நல்ல சௌகரியம் அடைகிறார்கள். அது போல நியாயவிலைக் கடைகளையாவது போலீஸ் ஹெட்குவார்டர்ஸில் போலீஸ் காரர்களுக்கு அனுசரணையாக வைப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: போலீஸ்காரர்கள் மட்டுமல்ல, எல்லோருக்குமே நியாய விலையில் கிடைக்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்த விலைக்கட்டுப்பாடு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

Rise in the prices of foodgrains

* 919 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** (on behalf of **Sri K. SATTANATHAK ARAYALAR**): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether conferences were conducted by District Collectors with political leaders to consider the situation arising out of rise in the prices of foodgrains;

21st March 1959]

(b) if so, what are the districts where such a conference was conducted; and

(c) what are the conclusions arrived at?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) (1) North Arcot.

(2) Tanjore.

(3) Salem.

(4) Tirunelveli.

(5) Tiruchirappalli.

(c) The meetings with local M.L.As., merchants, etc., were convened to discuss the measures that should be taken to bring down the prices. It was decided to open fair price shops with the help of millers and merchants, wherever necessary, and to sell rice at reasonable rates.

SRI V. K. KOTHANDARAMAN : கேள்வியின் உபபிரிவு (ஏ)-க்கு ஆம் என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய எம். எல்.ஏ.க்களைக்கொண்ட ஒரு மகாநாடு தான் நடைபெற்றதே ஒழிய, அரசியல் தலைவர்களைக் கலந்து ஒரு மகாநாடு நடை பெறவில்லை. ஆகவே, உணவுப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதினால், இதுபற்றி அரசியல் தலைவர்களையும் கலந்து செய்யப்படவில்லை. இருந்தாலும், எம்.எல்.ஏ.க்கள். . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் நான் சொல்லுவதை கேட்கவில்லை. கேள்வி நேரத்தின்போது அங்கத்தினர் ஒரு பிரசங்கம் செய்கிறார்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சட்டசபை அங்கத்தினர்கள் வெவ்வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். சட்டசபை பிரதிநிதிகளாக இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இதற்காக இவ்வளவு பெரிய ஒரு பிரசங்கம் செய்யவேண்டியதில்லை. அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளப்பட்டார்களா என்று நேரிடையாக ஒரு கேள்வியைக் கேட்டால், ஒரு நிமிஷத்தில் முடிந்துபோகுமே ?

Supply of foodgrains to Harijan Hostels and Orphanages

* 920 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன ஹாஸ்டல்களுக்கும், அனாதை விடுதிகளுக்கும் அரசாங்கம் கொள்முதல் செய்து வைத்திருக்கும் உணவு தான்யத்திலிருந்தோ அல்லது குறைந்த விலைக்கோ தான்யங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரம் என்ன ?

(இ) இல்லையானால், அந்த ஹாஸ்டல்களுக்கு தான்யங்கள் நியாய விலைக்கு எளிதில் கிடைக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The question does not arise in view of the answer to clause (a) above.

(c) The Collectors and Grain Purchase Officers have been specially instructed to ensure that large-scale consumers of rice,